DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 80/2020 LW- 4 PW- 2

| | |
|---|---|
| Name | : பூசைத்துரை (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சன்னாசி |
| Village | : செந்துறை |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 60/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2025

( 1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து எல்.ஐ.சி. முகவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் காலை நேரத்தில் ஆஜர் எதிரிகளின் வீட்டின் அருகே அ.சா.1ம், ஆஜர் எதிரிகளும் வாய்த்தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அதற்கு காரணம் சொத்துப் பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.11 16:07:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 80/2020 LW- 6 PW- 3

| | |
|---|---|
| Name | : மஞ்சு (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : வேணுகோபால் |
| Village | : செந்துறை |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2025

( 1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளும் பக்கத்து வீட்டுக்காரர்கள். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் ஆஜர் எதிரிகளின் வீட்டின் முன்பாக சத்தம் கேட்டது. அடிபுடி சண்டை போட்ட சத்தம்கேட்டது. நாங்கள் வீட்டில் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 21.09.2018ம் தேதி இரவு 8.30 மணியளவில் செந்துறையில் எதிரி கணேசன் குடியிருக்கும் வீட்டிற்கு அ.சா.1 வந்து சொத்தில் பங்கு கேட்டு தகராறு செய்தாரா என்றால் எதற்காக தகராறு செய்தார் என்று தெரியாது. அப்போது நானும், அருகே குடியிருக்கும் பூசைத்துரை, முருகன் ஆகியோர் அவர்களிடம் இரவு நேரத்தில் தகராறு வேண்டாம் என்றும், விடிந்தவுடன் ஊரில் உள்ள பெரியவர்களை வைத்து

பேசிக்கொள்ளுமாறு சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து என்ன சம்பவம் என்று தெரியாது என்றும், நான் சமாதானம் செய்து வைக்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.11 16:07:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்